திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், போந்தவாக்கம் கிராமத்தில் கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றிய அமைப்பாளர் ஆ.சந்திரமோகன் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கைப்பந்து விளையாட்டுப் போட்டியை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், ஜெ.மோகன்பாபு, இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், எம்.கேசவன், ரமேஷ், ஏசுரத்தினம், சுப்பிரமணி, சாண்டில்யன், கோ.யஷ்வந்குமார், செ.முத்து, சி.அரிஷ்குமார், நா.சீனிவாசன், கு.கிஷோர். பா.முத்துசாமி, உதயகாந்தம்மாள், ஜோதி. ம.அமுல்ராஜ் லாரன்ஸ், மருத்துவர் பாலசந்தர், அன்புரமேஷ், பாரத்தசாரதி, ரவி. விஜய்வின்சென்ட், சங்கர், வீரபத்திரன், பரத்குமார், திருப்பதி. சுந்தராஜ் அஜித், மனோஜ், இளங்கோ, அன்பரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

துண்டிக்கப்பட்ட குழாய்க்கு இணைப்பு அளித்து-

சின்னமனூர் ஒன்றிய விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிப்பீர்!

சட்டப் பேரவையில் – கம்பம் நா. இராமகிருஷ்ணன் கோரிக்கை!

சென்னை, ஜன.12-

சின்னமனூர் ஒன்றியத்தி லே தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து நீர் கொண்டுவரப்படும் குழாய் துண்டிக்கப்பட்டதால், 2 ஆண்டு காலம் வேதனை யோடு இருக்கும் விவசாயிகளுக்கு மறு வாழ்வு அளிக்க அந்தக் குழாயைப் பழுது பார்த்து இணைத்து விடுமாறு பேரவையில் கம்பம் நா. இராம கிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார்.

அவரது பேச்சு வருமாறு:-

நா.இராமகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், சீர்மிகு சிந்தனையால், தன்னுடைய அனுபவத்தால், பட்டறிவால், இலட்சக்கணக்கான மக்களை சந்தித்து, கோரிக்கைகளைப் பெற்று, அதன் தரவுகள் மூலமாக தினம், தினம் மனம் கவரும் திட்டம், தினம், தினம் புது திட்டங்கள் என்ற வகையிலே மாண்புமிகு ஆளுநர் பெயரிலே இன்றைக்கு இந்த அவையிலே அறிக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையையொட்டி எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலகத்திலே ஒவ்வொரு மனிதனும் தான் செய்கின்ற தொழிலில், பணியில் கடமையைச் செய்வதன் மூலமாகத்தான் இந்த உலகம் இயங்குகிறது. ஆக, அந்தத் தொழிலிலோ, அந்தப் பணியிலோ ஏற்றத் தாழ்வு பார்க்கக் கூடாது. கடமையைச் செய்ய வேண்டும் என்பதுதான் அதனுடைய கர்மம்.

ஆனால் எவ்வளவு புகழ் வந்தாலும், பணம் இருந்தாலும், பெருஞ்செல்வம் குவிந்தாலும், அரசு அதிகாரம் பெற்றாலும் இன்னும் செய்து அரசு பொறுப்புகளிலே இருந்தாலும் அவர்கள் கடமையில் இருந்து விலகிச் சென்றால், கடமையிலிருந்து தவிர்த்தால் தனி மனிதனுடைய வளர்ச்சி பாதிக்கும், சமூக வளர்ச்சி பாதிக்கும், நாட்டினுடைய வளர்ச்சி பாதிக்கும், மருத்துவம் சீர்குலையும், கல்வி சீர்குலையும், சட்டம் சீர்குலையும், தேசத்தினுடைய நலன் பாதிப்பதோடு வல்லரசாக மாறுகின்ற நாடு நிச்சயமாக அந்த இலக்கை தொட முடியாது. ஆகவே, அந்தக் கடமையை உணர்ந்து, அந்தக் கடமையை உணர்ந்து கடமையை தவறிய, இன்னும் கூட சொல்லப்போனால், தான் செய்யக்கூடிய கடமையை இந்த அவையிலே ஆளுநர் உரையை வாசிக்காமல் வெளியே சென்றிருக்கின்ற இந்த ஆளுநருக்கு கண்டனம் தெரிவிக்கின்ற இந்த தீர்மானத்தை முன்மொழிவதிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் சிறந்த கடமையைச் செய்திருக்கின்றார்கள். அவர்களுடைய கடமையின் விளைவால் கடந்த மூன்றரை ஆண்டுகளுக்குள் வறுமை ஒழிப்புத் திட்டம், ஒன்றிய அரசின் நிதி ஆயோக் திட்டத்தின்கீழ் நீடித்த நிலைத்த குறியீடுகளில் கிட்டத்தட்ட 11 இனங்களில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்கின்றது. வறுமை ஒழிப்பு, பசிப் பிணி அகற்றுதல், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், திடமான கல்வி, மருத்துவம் மற்றும் பாலின சமத்துவம், சமத்துவத்தினுடைய வேறுபாடுகளை களைதல், பொருளாதார மற்றும் சிறந்த வேலைவாய்ப்பு, புத்தொழில் மற்றும் தொழில் புத்தாக்கம் ஆகிய எண்ணற்ற திட்டங்கள் அதன் மூலமாக இந்த நாடு செழிப்பதற்கு தலைவர் தன்னுடைய கடமையை சிறப்பாக செய்திருக்கின்றார்கள்.

தமிழ்நாடு அரசுக்கு ஐ.நா.சபை விருது மேலும், மருத்துவத் துறையில் மக்களைத் தேடி மருத்துவத்தின் மூலமாக 2 கோடி மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். அந்தவகையிலே ஐக்கிய நாடு சபை தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கி இருப்பதும், கல்வித் துறையிலே இன்றைக்கு, உயர் கல்வித் துறையில் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் 81 விழுக்காட்டிலிருந்து 89 விழுக்காடாக இடைநிற்றல் இல்லாமல் சேர்க்கையை அதிகரித்தன் மூலமாக ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு விருதுகள் வழங்கியிருப்பதும், இன்றைக்கு பாராட்டக்கூடிய ஒன்றாக நான் கருதுகின்றேன்.

பெஞ்சல் புயல் 1 ஆம் தேதி தாக்கியபொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு துடிதுடித்துப் போய் இருப்பார்கள். இரவெல்லாம் தூங்கவில்லை. கண் விழித்து, கண் விழித்து சோர்வோடு, களைப்போடு இருந்த நேரத்தில்கூட கடமை உயிர் என பெரிதென்று கருதிய காரணத்தினால் அன்றைக்கு காலையிலேயே பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதுகிறார். அந்த கடிதத்தில் விவரத்தை எழுதுகிறார். நிவாரணம் மற்றும் தற்காலிக சீரமைப்பிற்காக ரூ.2475 கோடி தேவை. இடைக்கால நிவாரணமாக ரூ.2000 கோடி தேவை. அதேநேரத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த மத்தியக் குழு அனுப்பி வைக்க வேண்டும். மத்தியக் குழுவின் மூலமாக இங்கு சேதாரங்களை பார்வையிட்டு அறிக்கை தர வேண்டுமென்று கேட்டதோடு அந்த விவரத்தையும் முழுமையாக எழுதுகிறார். 65 இலட்சம் குடும்பங்கள் பாதித்திருக்கின்றது. ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் பாதிப்படைந்திருக்கிறார்கள். 2 இலட்சத்து 13 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. 9,859 கிலோ மீட்டர் சாலைகள் பழுதாகி இருக்கின்றது. 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு பாலங்கள் பழுதாகியிருக்கின்றது. மின்மாற்றிகள் சேதாரம் ஏற்பட்டிருக்கின்றது.

இப்படி எண்ணற்ற சேதங்களினால் நிதி இழப்பு ஏற்பட்டு அந்த விவரத்தை முழுமையாக கடிதம் எழுதி அத்தோடு ஓய்வு பெறாமல் அவரும், துணை முதலமைச்சர் அவர்களும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று கள ஆய்வு செய்து மக்களை சந்தித்து ஆறுதல் சொல்லி அரசு இயந்திரங்களை முடுக்கிவிட்டு, துரிதமாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களை குறுகிய காலத்திற்குள் இயல்பு நிலைக்கு கொண்டு வர முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியை இன்றைக்கு நாடே வியந்து பாராட்டுகின்றது. மத்தியக் குழு வந்தது, பார்வையிட்டது. தெளிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார். ரூ.6675 கோடி ரூபாய் நிவாரணப் பணிகளுக்கு வேண்டுமென்று கேட்டார். ஆனால், ஒன்றிய அரசோ ரூ.944 கோடியை மட்டும் வழங்கியது. அது ஒன்றிய அரசினுடைய பேரிடர் நிதி கிடையாது.

அது மாநில அரசின் பேரிடர் நிதியாகும். பொதுவாக ஒரு மாநிலத்திற்கு பேரிடர் ஏற்பட்டால், அதனை தேசிய பேரிடராகதான் கருத வேண்டும். ஏனென்றால், பல தேசிய இனங்கள் சேர்ந்ததுதான் ஒரு தேசியம். பல மாநிலங்களைச் சேர்ந்ததுதான் ஒரு ஒன்றிய அரசு. மாநிலங்கள் வலிமை பெற்றால்தான் ஒன்றிய அரசு வலிமை பெற முடியும். ஆகவே, அந்த ஒன்றிய அரசு மாநில அரசிற்கு உரிய நிதியை வழங்காதது குறித்து நம்முடைய நிதி அமைச்சர், தங்கம் தென்னரசு அவர்கள் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில், "ஒன்றிய அரசால் தமிழ்நாடு அரசிற்கு அநீதி இழைக்கப்படுகின்றது" என்ற கருத்தினை மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அநீதி இழைக்கப்படுகிறது என்று தன் உள்ளக் குமுறலை வெடிக்கின்றார். கொந்தளித்து எடுத்துக்காட்டுகின்றார். தமிழ்நாட்டிற்கு நீங்கள் நியாயமாக வழங்க வேண்டிய நிவாரண நிதியை வழங்காமல், பீஹார் மாநிலத்தின் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.26,000 கோடி வழங்குவதும், வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.15,000 கோடி வழங்குவதும், அமராவதி தலைநகர் கட்டுவதற்கு ரூ.15,000 கோடி வழங்குவதும் எந்த நோக்கம் கொண்டு? ஒரே ஒரு நோக்கம்தான். தில்லி நாற்காலிக்கு தமிழ்நாடு அரசு கால்களாக இல்லை என்கின்ற காரணத்தால்தான் தமிழக அரசிற்கான நிவாரணம் மறுக்கப்படுகிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் தலைவர், தமிழக முதல்வருடைய திராவிட மாடல் அரசு, எண்ணற்ற திட்டங்களை இந்நாட்டு மக்களுக்குத் தந்திருக்கின்றது. மகளிர் விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தவப் புதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் கனவு இல்லத் திட்டம், சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற எண்ணற்றத் திட்டங்களை நாட்டு மக்களுக்குத் தந்தாலும்கூட, அந்தத் திட்டங்களை மக்களுக்கு வழங்குவதற்கு எவ்வளவு நிதி தேவைப்பட்டிருக்கும்? மகளிர் உரிமைத் தொகைக்கு எவ்வளவு நிதி தேவைப்பட்டிருக்கும்? கொரோனா காலத்தில் ஏற்பட்ட பாதிப்பு, வெள்ளப் பேரிடரால் ஏற்பட்ட பாதிப்பு, கடும் விலைவாசி போன்று பல்வேறு காரணங்களால் நிதிச்சுமையானது, இன்றைக்கு நாளுக்குநாள் ஏறிக் கொண்டிருந்தாலும் கூட, மக்களுக்கு சென்று சேர வேண்டிய திட்டங்களை இந்த அரசு முழுமையாக சேர்த்துக்கொண்டிருக்கிறது.

நிதி அமைச்சர் அவர்களுக்கு மிக தெளிவாகத் தெரியும். ஒன்றிய அரசு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நிதி ஆணையத்தை அமைக்கும். அந்த ஆணையத்தின் மொத்த வரி வருவாயிலிருந்து எவ்வளவு விழுக்காடு எவ்வளவு மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம் என்று விதி உள்ளது. அதன் அடிப்படையில், 13வது நிதிக் குழுவானது, 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் 36 விழுக்காடு ஒதுக்கியது. அதே நேரத்தில் 14வது நிதிக் குழுவானது, 42 விழுக்காடு நிதி ஒதுக்கியது. ஆனால், பிரதமர் மோடி அவர்கள் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது, ஆணையம் 50 விழுக்காடு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால், அவர் பிரதமராக இருக்கின்றபோது, 42 விழுக்காடு நிதி ஒதுக்கி, தமிழ்நாட்டிற்கு முழுமையாக ஒதுக்கவில்லை. 15வது நிதிக் குழுவில், முறையாக 52 விழுக்காடு நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். மாறாக 42 விழுக்காடு மட்டும் ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், *terms of reference* அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையைத் தவிர்த்து விட்டு, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நிதி குறைவாக ஒதுக்கியுள்ளதை நிதி அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக அன்றைக்கு சுட்டிக் காட்டினார்கள். (மணியடிக்கப்பெற்றது)

தமிழ்நாட்டிற்கு நிதிக் குறைப்பு

ஆக, மக்கள் பெருக்கத்தை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும் நம் தமிழ் நாட்டிற்கு இந்த நிதிக் குறைப்பு ஒரு தண்டனை. அதே நேரத்தில், உத்தரப் பிரதேசம் மற்றும் பீஹார் போன்று மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருக்கின்ற மாநிலங்களுக்கு கிட்டத்தட்ட 2,28,000 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது. தென் மாநிலத்தின் 5 மாநிலங்களுக்கும் சேர்த்து 1,98,000 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான், தமிழ்நாடு அரசு, இந்நிதி நெருக்கடியிலும் எண்ணற்ற திட்டங்களைச் செய்து சாதனை புரிகின்றது, திராவிட முன்னேற்றக்கழக அரசின் தளபதி அவர்களை இந்நேரத்தில் பாராட்டுகிறேன்.

நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஒரே ஒரு கோரிக்கை மட்டும்தான் என்னுடைய கோரிக்கை. தொட்டமாந்துரை கோரிக்கை, பி.டி.ஆர். பழனிவேல் கால்வாய் சீரமைப்புத் திட்டம் மற்றும் சின்னமனூர் ஒன்றியத்திலே சட்ட விதிப்படி கிணறு தோண்டி, அங்கிருந்து சின்னமனூர் ஒன்றிய பகுதிக்கு குழாய் மூலமாக தண்ணீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த குழாய் துண்டிக்கப்பட்டதனால், 2 ஆண்டு காலமாக விவசாயிகள் மிகவும் வேதனையோடு இருக்கின்றார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், கடுமையான முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆகவே, வெகுவிரையில் அந்த குழாய் இணைப்பை இணைத்து விவசாயிகளின் மறுவாழ்வுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் 133வது, 133 (அ) வட்டத்தில் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவும், ஏன் வேண்டும் தி.மு.க என்ற தலைப்பில் விளக்க உரையும், மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை பகுதி செயலாளர் கே ஏழுமலை எம் .சி. தலைமையில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் வட்டக் கழக செயலாளர்கள் பி. ஜெயக்குமார், பி மாரி, பகுதி துணை செயலாளர் பாபா சுரேஷ் ஆகியோர் வரவேற்புரையில் , சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்டங்களை வழங்கினார்கள். இந் நிகழ்ச்சியில் மாநில இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி , தொகுதியின் பார்வையாளர் திருமதி எம்.பத்மபிரியா , மாவட்ட அவை தலைவர் மாம்பலம் சந்திரசேகர் , மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி மோனிஷா கருணாநிதி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ச. சண்முகநாதன், சூர்யா பவுண்டேஷன் நிறுவனர் இ கார்த்திக் மற்றும் தியாகராய நகர் மேற்கு , கிழக்கு பகுதியின் வட்ட கழக செயலாளர்கள் 133வது, 133 (அ) வட்ட நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

இரா.செந்தில்குமார் தலைமை ! டாக்டர் கலாநிதி வீராசாமி முன்னிலை!

இராயபுரம் கிழக்குப் பகுதியில் பொங்கல் விழா - கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள்!

ஆர்.டி.சேகர் வழங்குகிறார் ! ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி - அ.சுபேர்கான் - வ.பெ.சுரேஷ் பங்கேற்பு !

சென்னை ஜன.13

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் பொங்கல் விழா மற்றும் கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை மற்றும் நலஉதவிகள் வழங்கும் விழா இன்று (13.01.2025 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் தலைமை வகிக்கிறார். டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, முன்னிலை வகிக்கிறார்.

இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் டாக்டர் அ. சுபேர்கான், வ.பெ.சுரேஷ், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

தா.ஜெயபாலன், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், ஆர்.வி. கணேஷ், க.கலைச்செல்வன், ஜி.சதீஷ் குமார், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.சுரேஷ், எம். என்.வெங்கட், அத்தோ பி. முனுசாமி, வி.குமார், ஜசி எப்.பழனி, என்.பாரி, கே. லட்சுமணன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, புத்தாடை மற்றும் நலஉதவிகள் வழங்குகிறார்.

இதில் தா.இளைய அருணா, பி.டி.பாண்டி செல்வம், நா.மனோகரன், மு.கோபி, க.நாகம்மை, வே.சிவகுமார், கி.ராஜேந்திரன், நா. சண்முகம், லயோலா கே.மதன், பி.சோமசுந்தரமூர்த்தி, எல்.சீனிவாசன், இரா. மருதுபாண்டியன், சு.சேகர், க.சேகரன், லயன். எம்.தீனதயாளன், பி.செந்தில்குமார், கார்த்திக் செங்குட்டுவன், லியோ டி. சுரேஷ், எஸ்.குமார், ஆர். ராஜன், க.சுரேஷ், எம்.டி. மதன்ராஜ், யு.அனிபா, எஸ். ஆண்ட்ரூ, செட்டி மூ.சந்திரன், கே.எஸ்.குமார், எஸ். மணிகண்டன், ஆ. ஆனந்தன், பிரபாகரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர் நன்றி கூறுகிறார்.

தேசிய கீதத்தை அவமதிக்கும்

ஆளுநர் ரவியை பதவியிலிருந்து நீக்குக!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் கண்டனம்!

சென்னை, ஜன.13-

"தேசிய கீதத்தை அவமதிக்கும் ஆளுநர் ரவியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தேசிய கீதத்துக்கு எதிரானவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்ற போலி பிம்பத்தை ஏற்படுத்த ஆளுநர் ரவி முயல்கிறார் என்பதையே அவர் வெளியிட்டுள்ள கருத்து புலப்படுத்துகிறது. மூன்றாவது முறையாக பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த பிறகு, ஆளுநருக்கு எதிரான கண்டன குரல்கள் நாடு முழுவதும் எழுந்துள்ளன.

அரசியலமைப்பின் 176 வது பிரிவின் கீழ் அரசு தயாரிக்கும் உரையை ஆளுநர் படிக்க வேண்டும். இதே போல் மத்தியிலும் மத்திய அரசு தயாரிக்கும் உரையை குடியரசுத் தலைவர் படிப்பார். எந்த மாநிலத்திலும் ஆளுநர்கள் அரசு தயாரிக்கும் உரையை படிக்க மறுத்து, தங்கள் சொந்தக் கொள்கையை திணிக்க முயல்வதில்லை. அதேபோல் தான் குடியரசுத் தலைவரும்.

ஆனால், ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் ஆதரவாளராகத் தன்னை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் ஆளுநர் ரவி, தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகவே தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அதேசமயம், சனாதன கருத்துகளைத் தாம் வகிக்கும் பொறுப்பையும் மீறித் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

பெரியார், அண்ணா, கலைஞர் போன்றோர் பெயர்களை உச்சரிப்பதைத் தவிர்ப்பதற்காகவே, 3 முறையும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அவையிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார். அவரது செயலை நாடே கண்டித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்கும் சட்டப்பேரவை தேசிய கீதத்தோடு முடியும் என்பது தான் மரபு. தமிழ்த்தாய் வாழ்த்தை நீக்கிவிட்டு, தேசிய கீதத்தை இருமுறை இசைக்கச் சொல்கிறார் ஆளுநர் ரவி. தேசிய கீதத்தின் மீது அவருக்கு மரியாதை இல்லை. அவருக்குத் தமிழ்த்தாய் வாழ்த்து மீது தான் வெறுப்பு.

மூன்றாவது முறை வெளிநடப்பு செய்து தாம் அம்பலப்பட்டு நிற்கிறோம் என்ற நிலையில், முதலமைச்சர் தேசிய கீதத்தை மதிக்காதது போன்ற நாடகத்தை அரங்கேற்றத் துடிக்கிறார் ஆளுநர். இது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களும் சுதந்திர தினவிழாவில் தேசியக் கொடியை ஏற்ற அன்னை இந்திரா காந்தியிடம் அனுமதி பெற்றுத் தந்தவர் அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் தான். இந்த வரலாறு ஆளுநர் ரவிக்கு தெரியுமா? அல்லது தெரியாதது போல் நடிக்கிறாரா?

தேசத்தையும் தேச மக்களையும் நேசிப்பதால் தான், மத்தியில் காங்கிரஸ் ஆண்ட போது, நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளிலும் திமுக தோள் கொடுத்தது என்பது வரலாறு.

அவையில் தேசிய கீதமே பாடப்படவில்லை என்றால் ஆளுநர் எதிர்ப்பு தெரிவித்தால் அதில் நியாயம் இருக்கிறது என்று சொல்லலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நிகழ்ச்சி முடிவில் தான் தேசிய கீதம் இசைக்கப்படும் என்று குழந்தைக்குக் கூட தெரியும். ஆனால் ஆளுநருக்கு தெரியாமல் போனது ஏனோ? சொல்லப்போனால், அவை முடியும் போது இசைக்கப்படும் தேசிய கீதத்துக்கு மரியாதை தராமல், முன்பே வெளிநடப்பு செய்த ஆளுநருக்கு, தேசப்பற்று பற்றி முதலமைச்சருக்கு வகுப்பு எடுக்கத் தகுதி இல்லை. ஆளுநர் ரவி சார்ந்திருக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் தேசப்பற்றை. உலகமே அறிந்ததும்.

சுதந்திரப்போராட்டத்தின் போது ஓடி ஒளிந்து கொண்டவர்களில் வழி வந்த ஆளுநர் ரவிக்கு, தேசப்பற்றைப் பற்றி பேச தகுதியில்லை. மகாத்மாவை படுகொலை செய்தவர்களின் வழிவந்தவர்களுக்கு தேசப்பற்றைப் பற்றிப் பேச தகுதியில்லை. தேசிய கீதத்தை அவமதித்து அவையிலிருந்து வெளியேறிய ஆளுநர் நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையேல்,அவரை ஆளுநர் பதவியிலிருந்து மத்திய அரசு உடனே வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.பி. ரஞ்சன் குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 அ வட்டம் சார்பாக தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா வட்டச் செயலாளர் வே. வெற்றிவேல் தலைமையில் எஸ். முரளி,அ.ரேவதி முன்னிலையிலும் நிகழ்ச்சியில் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தா.வேலு பி.ஏ,எம். எல்.ஏ, அவர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக பொறுப்பாளர்கள் பாக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு புத்தாடை வழங்கி சிறப்பித்தனர் இந்நிகழ்ச்சியில் என். அன்பழகன்,எஸ். முனுசாமி, வட்ட செயலாளர் ஆதாஸ், மா. பா. அன்பு, தவநேசன்,கண்ணன், துரை பார்த்திபன், பொன்னுசாமி,என். இளங்கோவன்,பா. முருகேசன்,ஏ.ஆர். அமுல்ராஜ், டி. வின்சென்ட், ஜி.எம். செல்வராஜ், செல்வகுமார்,மரியா, வினோத் குமார், டோமினிக்,எல்.ஆர். சுரேஷ்,ரஞ்சிதம், மைக்கேல் அகஸ்தியன், கார்த்திக்,தர்ம பால், உஷா,செந்தில்குமார், கருணாநிதி, சரவணகுமார்,ரமேஷ், சிவா,சுகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விஷால்,சாமுவேல் நன்றி கூறினர்.